கள், கைக்கடிகாரங்கள், உணவுப் பொருட்கள் போன்ற பலவ பண்டங்களின் உற்பத்தியிலும் அரசுத் துறை நிறுவனங்கள் இ செயல்பட்டு வருகின்றன.

## பொதுத்துறை நிறுவனங்களின் பிரச்சினைகள்: (problems of Public Sector)

பொதுத்துறை நிறுவனங்கள் பலவகைகளிலும் சிறப்பா முறையில் செயல்பட்டு வந்தாலும் பல பிரச்சினைகள் உள்ளன.

1. **நஷ்டத்தில் இயங்குகின்றன:** பல அரசுத்துறை நிறுவனங்கள் நஷ்டத்திலேயே செயல்பட்டு வருகின்றன. பொதுத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வரும் இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் பெரும்பாலும் நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளை கட்டுவதில் ஏற்படும் தாமதமும் மற்றும் சரியாக திட்டமிடாததும் நஷ்டத்திற்கு காரணமாகும்.

2. **தொழிலாளர் பிரச்சினை:** பொதுத்துறை நிறுவனங்கள் தொழில் தகராறுகளால் மோசமாக பாதிக்கப்படுகின்றன. வேலை நிறுத்தமும் கதவடைப்பும் போராட்டமும் தொழிற்சாலைகளின் செயல்திறனை குறைக்கின்றன.

3. **தவறான விலைக்கொள்கை:** அரசின் தவறான விலைக்கொள்கையால் இந்நிறுவனங்கள் ஓரளவுக்கு பாதிக்கப் படுகின்றன. இந்நிறுவனங்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு குறைந்த விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இரும்பு எஃகு, எண்ணெய், உரம் நிலக்கரி ஆகியவற்றிற்கு குறைந்த விலைகளே நிர்ணயிக்கப் படுகின்றன.

4. **முழு உற்பத்தித்திறன் இல்லாமை:** பொதுத்துறை நிறுவனங்கள் முழு உற்பத்தித்திறனில் செயல்படுவதில்லை. தவறான மதிப்பீடுகள், எதிர்கால தேவையை மதிப்பிடாதது. மின்சாரத் தட்டுப்பாடு, தொழில்தகராறு உற்பத்தியில் ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றால் இந்நிறுவனங்கள் முழு உற்பத்தித்திறனில் இயங்கவில்லை.

5. **அரசின் கொள்கைகள்:** பொதுத்துறை நிறுவனங்களின் றைவான திறமைக்கும் நட்டத்திற்கும் அரசின் கொள்கைகள் ளவுக்கு காரண்மாக இருக்கின்றது. நிர்வாக இயக்குநர்களை மிக்காதது, நிறுவனத்தின் செயல்பாட்டில் தலையிடுவது ஆகியன ன் செயல்பாட்டைக் குறைக்கின்றது.



6. **தனி தேர்ச்சிப்பெற்ற பணியாளர்களின் பற்றாக்குறை:** பொதுத்துறை நிறுவனங்கள் அதிக முதலீட்டையும் நவீன தொழில் நுணுக்கத்தையும் சார்ந்ததாக இருக்கின்றது. இதை இயக்க தனி தேர்ச்சிப்பெற்றவர்களை வெளிநாடுகளிலிருந்துப் பெற வேண்டி யிருக்கின்றது.

7. **அதிக செலவு:** பொதுத்துறை நிறுவனங்கள் குளிர்சாதன வசதி செய்தல், கட்டிடத்திற்கான வாடகை, அலுவலக தளவாட சாதனங்கள் ஆகியவற்றிற்கு அதிகம் செலவிடுகிறது. இத்துடன் நகரங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியன அமைக்க அதிகம் செலவிடுகின்றன. உதாரணமாக இந்துஸ்தான் எஃகு நிறுவனம் ரூ.78 கோடியை இவ்வசதிகளுக்காக செலவிடுகின்றது.

சமீப காலத்தில் இப்பிரச்சினைகளைத் தீர்க்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் காரணமாக பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறன் ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. பொதுத்துறை நிறுவனங்கள் நம் நாட்டிற்கு வலுவான தொழில் அமைப்பை ஏற்படுத்தித் தந்துள்ளன எனலாம். பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு இருக்கின்ற இத்துறையால் ஒரு கணிசமான அளவிற்கு இலாபம் ஈட்டித்தர முடிந்தால் அரசிற்கு நல்ல வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது எனலாம்.

**6. இந்திய பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்கு மற்றும் பிரச்சினைகள் குறித்து விவரி ?**

## தனியார்துறை: (Private Sector)

தனியாரால் நடத்தப்படுகின்ற தொழில்கள் தனியார் துறையில் சேருகின்றது. பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் இந்தியாவில் தனியார் துறையிடமே உள்ளது. பொதுத்துறை பெருகி வந்த போதிலும் தனியார் துறை தான் முதன்மை நிலையில் உள்ளது. நாட்டின் நிகர உற்பத்தியில் தனியார் துறையின் பங்கு 80% ஆகும். வேளாண்மைத் துறை, சிற்றளவு தொழில் மற்றும் குடிசைத் தொழில், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், நுகர்வுப் பண்டங்கள் உற்பத்திச் செய்யும் தொழில்கள், சாலைப் போக்குவரத்து போன்றவைகள் பெரும்பாலும் தனியார் துறையில் உள்ளன.

இந்தியப் பொருளாதாரத்தில் தனியார் துறை பின்வரும் வகைகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

1. **பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம்: (Importance in Economic development)** தனியார் துறையினர் இலாப நோக்கத்தில்

Scanned with CamScanner

செயல்படுகின்றனர். இதனால் புதிய பண்டங்களையும், புதிய தொழில் நுணுக்கத்தையும் புதிய கருவிகளையும் அறிமுகப்படுத்துகின்றனர். தங்களது புத்தாக்கங்களால் உற்பத்தி துறையை நவீனப் படுத்துகின்றனர். இது தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன.

2. நவீனத் தொழில்கள்: (Modern Industries) தனியார் துறையில் பல நவீன தொழில்கள் உருவாக்கப்படுகின்றன. முக்கியமான நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் தனியார் துறையில் உள்ளன. குறிப்பாக துணி, சர்க்கரை, பேப்பர் எண்ணெய் ஆகிய பொருட்கள் தனியார் துறையினரால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

3. சிறு தொழில் வளர்ச்சி: சிற்றளவு மற்றும் குடிசை தொழில்கள் தனியாரால் நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு அளிப்பதில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்தியாவில் எல்லா சிற்றளவு மற்றும் குடிசைத் தொழில்கள் தனியார் துறையிடம் உள்ளது. இவைகள் ஏறத்தாழ 800 வகையான பொருட்களை உற்பத்திச் செய்வதில் ஈடுபட்டு உள்ளன.

4. வியாபார நடவடிக்கைகள்: வியாபார நடவடிக்கைகள் பெரும்பாலும் தனியார் துறையிடம் உள்ளது. இந்தியாவில் முக்கியத் தொழிலான வேளாண்மை தனியார் துறையிடம் உள்ளது. இது ஏறத்தாழ 65% மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கின்றது.

5. தேசிய வருவாயில் பங்கு: தனியார் துறை தேசிய வருமானத்திற்கு 80% பங்கை அளிக்கின்றது. இத்துடன் வேலைவாய்ப்பை அளிப்பதிலும் தனியார்துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. தேசிய வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு அளிப்பதில் பொதுத்துறையைவிட தனியார் துறை அதிக பங்கு வகிக்கின்றது.

தனியார் துறை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் உதவுகிறது. இருந்த போதிலும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டிய ஒரு துறையாக இது உள்ளது.

**தனியார் துறையின் செயல்பாடு: (Performance of Private Sector)**

தனியார் துறை பின்வரும் வகையில் செயல்பட்டு வருகின்றது.



1. பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்: தனியார் துறையினர் பேரளவு மற்றும் சிற்றளவுத் தொழில்கள் மூலம் தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இதனால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஓரளவுக்குப் பெருகியுள்ளது.

2. தொழில் பரவலாக்கப்பட்டது: (Diversification) தொழில் வளர்ச்சி தனியார் துறையால் பரவலாக்கப்பட்டது. ஒரு சில நிறுவனங்கள் பல்வேறு பொருளை உற்பத்திச் செய்து உதவுகின்றது. உதாரணமாக பொறியியல் கருவிகளை உற்பத்திச் செய்யும் எஸ்கார்ட் நிறுவனம் தற்போது உரம், சிமெண்ட் உற்பத்தி மற்றும் பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல் -தோட்டப்பயிர்கள் ஆகியற்றில் ஈடுபடுகிறது.

3. இலாபம் பெறுதல்: தனியார் துறையில் தொழில் நிறுவனங்கள் திறமையாக செயல்படுவதால் முதலீட்டுக்கான இலாப விகிதம் அதிகமாக இருக்கின்றது. தனியார் துறையின் இலாபவிகிதம் சுமார் 12.1% ஆக ரிசர்வ் வங்கியால் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பொதுத்துறை நிறுவனங்களின் இலாப விகிதம் 7.6% ஆக உள்ளது.

4. சிற்றளவு தொழில்களின் பெருக்கம்: தனியார் துறையின் வளர்ச்சியால் சிற்றளவு நிறுவனங்கள் பெருகியுள்ளன. இவை பலவகையான பொருட்களை உற்பத்திச் செய்து உதவுகின்றது. சிற்றளவு தொழில்களின் வளர்ச்சி தொழில் பரவலானதற்கும் வேலைவாய்ப்பு பெருகியதற்கும் காரணமாக அமைகின்றது.

5. வேலைவாய்ப்பு: தனியார் துறையில் உள்ள கைத்தறி மற்றும் மில் துணி உற்பத்தி -நிறுவனங்கள் வேலைவாய்ப்பு அளிக்கின்றன. ஏறத்தாழ 1 கோடி மக்களுக்கு மேல் இத்தொழிலை நம்பியுள்ளனர். இத்தொழிலும் கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் தனியார் துறையால் வளர்ச்சியடைந்தது.

**தனியார் துறையின் பிரச்சினைகள்: (Problems of Private Sector)**

இந்தியாவில் தனியார் துறை ஒரு பெரும் துறையாக இருந்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வருகின்றது. இருந்த போதிலும் இதன் செயல்பாடு திருப்திகரமாக இல்லை. இதற்குரிய முக்கியப் பிரச்சினையாக நிதி பெறுவது அமைகின்றது. இலாபநோக்குடன் செயல்படுவது சில முக்கியப் பிரச்சினைகளை உருவாக்குகின்றது. தனியார் துறையின் பிரச்சினையாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. பொருளாதார வளர்ச்சிக்கு குறைவான பங்கு : பொருளாதார

Scanned with CamScanner

வளர்ச்சிக்கு தனியார் துறை முக்கியப் பங்கு வகிக்க வேண்டி போதிலும் இதன் பங்கு குறிப்பிடத்தக்கதாக இல்லை. அடிப் மற்றும் மூலதனப் பண்டங்களை உற்பத்திச் செய்யும் தொழில் தனியார் துறையினர் ஆர்வம் காட்டுவதில்லை.

**2. சாதனங்கள் வீணாக்கப்படுகின்றன:** நுகர்வுப் பண்டங் அதிகம் உற்பத்திச் செய்கின்றது. குறிப்பாக அவசியமற்ற நு பண்டங்களை சிகரெட், மதுவகைகள், குளிர்சாதனப் பெ ஆகியவற்றை துரித வேகத்தில், உற்பத்திச் செய்கின்றது. என அவசியமானப் பண்டங்களின் உற்பத்தி தாமதப்படுகின்றது. இத சாதனங்கள் விரயமாக்கப்படுகின்றன.

**3. சர்வாதீனமும் பொருளாதார சக்திகுவிதலும்:** (Monopoly Concentration) தனியார் துறையின் வளர்ச்சியால் சர்வாதீனப் உருவாகின்றது. பொருளாதார சக்தி ஒரு சிலர் கையில் குவிகின் டாடா, பிர்லா ஆகியோரின் நிறுவனங்கள் சுமார் ரூ.1000 கோடி மேல் சொத்துக்களை வைத்திருக்கின்றன.

**4. தொழில் தகராறுகள்:** பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறை நிறுவனங்கள் தொழில் தகராறுகளால் அதி பாதிக்கப்படுகின்றன. கூலி உயர்வு, ஊக்கத்தொகை, ஆட் குறை ஆகிய நடவடிக்கைகளால் முதலாளி தொழிலாளர்களுக்கிடை தகராறுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக போராட்டங்க கதவடைப்பு, ஆகியவை அடிக்கடி நிகழ்கின்றன. இதனால் உற்ப நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

**5. நலிவுறும் தொழில்கள்:** (Industrial Sickness) தனிய துறையை பொறுத்த அளவில் நலிவுறும் தொழில்கள் ஒரு பெரு பிரச்சினையாக இருந்து வருகின்றன. நிர்வாகச்சீர்கேடு, தொழி தகராறுகள், பண்டங்கள் சரியாக விற்பனையாகாதது ஆகியவற்றா தொழில்கள் நலிவுறுகின்றன.

**6. நிதிப்பற்றாக்குறை:** தனியார் துறையினரால் நிதி மற்றும் கட வசதிகளை பெருக்குவது பிரச்சினையாக இருக்கின்றது. பணவீக்க போக்கு காணப்படுவதால் தனியார் தொழில்களில் முதலீ செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. தற்போது பல தொழி நிதிநிறுவனங்கள் தனியார் துறைக்கு உதவும் வகையி உருவாக்கப்பட்டுள்ளன.

தனியார் துறையின் இப்பிரச்சினைகளை முழுமையாக நிவ



வேற்றுதல் என்பது தீர்த்து வைக்க முடியாத ஒன்றாகும். தனியார் துறையில் எழும் பிரச்சினைகள் அதிக இலாபம் என்ற நோக்கத்தால் எழுகின்றன. இக்குறையை அரசின் கட்டுப்பாட்டின் மூலம் ஓரளவுக்கு நீக்கலாம்.

**7. இந்தியப் பொருளாதாரத்தில் சிற்றளவு மற்றும் குடிசைத் தொழிலின் முக்கியத்துவத்தை விளக்குக.**

நமது நாட்டுப் பொருளாதாரத்தில் சிறு தொழில்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. கிராமங்கள் அதிகம் இருப்பதாலும் மக்கள் தொகை அதிகம் இருப்பதாலும் நம் நாட்டில் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களின் வளர்ச்சி இன்றியமையாததாக இருக்கின்றது. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் சிறுதொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை பெருக்க வேண்டியது அவசியமாகின்றது.

**சிறு தொழில் விளக்கம்:** (Definition of Small Scale Industry) தளவாடங்கள், எந்திங்கள் இவற்றின் முதலீட்டு அளவு ரூ.20 இலட்சத்திற்கு மேற்படாமலிருந்தால் அத்தொழில் சிறு தொழிலாகும். முதலீட்டு அளவு ரூ.25 இலட்சத்திற்கும் மேற்படாமலிருந்தால் அது நடுத்தரத் தொழிலாகும். முதலீட்டின் அளவு ரூ.25 லட்சத்திற்கு மேற்பட்டிருந்தால் அது பேரளவுத் தொழிலாகும்.

சிறுதொழில்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. முதல்வகை தொழிற்கூடங்கள் அமைந்த சிறுதொழில்களாகும். மற்றொன்று குடிசைத் தொழிலாகும். ஆலைத்தொழில் சிறிய அளவில் இருந்தால் அது சிறுதொழில் எனப்படுகின்றது. அளவில் சிறியதாக இருக்கின்றது என்பதை தவிர மற்ற வகைகளிலோ உற்பத்தி முறையிலோ பேரளவு தொழிலுக்கும் சிறுதொழிலுக்கும் அதிக வேறுபாடு இல்லை.

இத்தொழில்களில் எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றது. வேலை செய்யும் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

குடிசைத் தொழிலில் பொருள் உற்பத்தி உடல் உழைப்பால் செய்யப்படுகின்றது. இயந்திரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை. குடியிருக்கும் வீடுகளிலேயே உற்பத்தி நடைபெறுகின்றது. உள்ளூரில் கிடைக்கும் கச்சாப்பொருட்களின் உதவிக்கொண்டு பொருட்கள் உற்பத்திச் செய்யப்பட்டு உள்ளூரிலேயே விற்பனைச் செய்யப்படுகின்றது.

**சிறுதொழிலின் நன்மைகள்:** சிறு தொழில்களும் குடிசை தொ

Scanned with CamScanner

வளர்ச்சிக்கு தனியார் துறை முக்கியப் பங்கு வகிக்க வேண்டியிரு போதிலும் இதன் பங்கு குறிப்பிடத்தக்கதாக இல்லை. அடிப்ப மற்றும் மூலதனப் பண்டங்களை உற்பத்திச் செய்யும் தொழில்கள் தனியார் துறையினர் ஆர்வம் காட்டுவதில்லை.

**2. சாதனங்கள் வீணாக்கப்படுகின்றன:** நுகர்வுப் பண்டங்கள அதிகம் உற்பத்திச் செய்கின்றது. குறிப்பாக அவசியமற்ற நுகர் பண்டங்களை சிகரெட், மதுவகைகள், குளிர்சாதனப் பெட் ஆகியவற்றை துரித வேகத்தில், உற்பத்திச் செய்கின்றது. என அவசியமானப் பண்டங்களின் உற்பத்தி தாமதப்படுகின்றது. இதனா சாதனங்கள் விரயமாக்கப்படுகின்றன.

**3. சர்வாதீனமும் பொருளாதார சக்திகுவிதலும்:** (Monopoly a Concentration) தனியார் துறையின் வளர்ச்சியால் சர்வாதீனப்போக் உருவாகின்றது பொருளாதார சக்தி ஒரு சிலர் கையில் குவிகின்ற டாடா, பிர்லா ஆகியோரின் நிறுவனங்கள் சுமார் ரூ.1000 கோடிக் மேல் சொத்துக்களை வைத்திருக்கின்றன.

**4. தொழில் தகராறுகள்:** பொதுத்துறை நிறுவனங்களைவி தனியார் துறை நிறுவனங்கள் தொழில் தகராறுகளால் அதிக பாதிக்கப்படுகின்றன. கூலி உயர்வு, ஊக்கத்தொகை, ஆட் குறைப் ஆகிய நடவடிக்கைகளால் முதலாளி தொழிலாளர்களுக்கிடையே தகராறுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக போராட்டங்கள கதவடைப்பு ஆகியவை அடிக்கடி நிகழ்கின்றன. இதனால் உற்பத் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

**5. நலிவுறும் தொழில்கள்:** (Industrial Sickness) தனியா துறையை பொறுத்த அளவில் நலிவுறும் தொழில்கள் ஒரு பெரு பிரச்சினையாக இருந்து வருகின்றன. நிர்வாகச்சீர்கேடு, தொழி தகராறுகள், பண்டங்கள் சரியாக விற்பனையாகாதது ஆகியவற்றா தொழில்கள் நலிவுறுகின்றன.

**6. நிதிப்பற்றாக்குறை:** தனியார் துறையினரால் நிதி மற்றும் கட வசதிகளை பெருக்குவது பிரச்சினையாக இருக்கின்றது. பணவீக்க போக்கு காணப்படுவதால் தனியார் தொழில்களில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. தற்போது பல தொழி நிதிநிறுவனங்கள் தனியார் துறைக்கு உதவும் வகையி உருவாக்கப்பட்டுள்ளன.

தனியார் துறையின் இப்பிரச்சினைகளை முழுமையாக நிறை



வேற்றுதல் என்பது தீர்த்து வைக்க முடியாத ஒன்றாகும். தனியார் துறையில் எழும் பிரச்சினைகள் அதிக இலாபம் என்ற நோக்கத்தால் எழுகின்றன. இக்குறையை அரசின் கட்டுப்பாட்டின் மூலம் ஓரளவுக்கு நீக்கலாம்.

**7.இந்தியப் பொருளாதாரத்தில் சிற்றளவு மற்றும் குடிசைத் தொழிலின் முக்கியத்துவத்தை விளக்குக.**

நமது நாட்டுப் பொருளாதாரத்தில் சிறு தொழில்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. கிராமங்கள் அதிகம் இருப்பதாலும் மக்கள் தொகை அதிகம் இருப்பதாலும் நம் நாட்டில் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களின் வளர்ச்சி இன்றியமையாததாக இருக்கின்றது. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் சிறுதொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை பெருக்க வேண்டியது அவசியமாகின்றது.

**சிறு தொழில் விளக்கம்:** (Definition of Small Scale Industry) தளவாடங்கள், எந்திங்கள் இவற்றின் முதலீட்டு அளவு ரூ.20 இலட்சத்திற்கு மேற்படாமலிருந்தால் அத்தொழில் சிறு தொழிலாகும். முதலீட்டு அளவு ரூ.25 இலட்சத்திற்கும் மேற்படாமலிருந்தால் அது நடுத்தரத் தொழிலாகும். முதலீட்டின் அளவு ரூ.25 லட்சத்திற்கு மேற்பட்டிருந்தால் அது பேரளவுத் தொழிலாகும்.

சிறுதொழில்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. முதல்வகை தொழிற்கூடங்கள் அமைந்த சிறுதொழில்களாகும். மற்றொன்று குடிசைத் தொழிலாகும். ஆலைத்தொழில் சிறிய அளவில் இருந்தால் அது சிறுதொழில் எனப்படுகின்றது. அளவில் சிறியதாக இருக்கின்றது என்பதை தவிர மற்ற வகைகளிலோ உற்பத்தி முறையிலோ பேரளவு தொழிலுக்கும் சிறுதொழிலுக்கும் அதிக வேறுபாடு இல்லை.

இத்தொழில்களில் எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றது. வேலை செய்யும் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

குடிசைத் தொழிலில் பொருள் உற்பத்தி உடல் உழைப்பால் செய்யப்படுகின்றது. இயந்திரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை. குடியிருக்கும் வீடுகளிலேயே உற்பத்தி நடை பெறுகின்றது. உள்ளூரில் கிடைக்கும் கச்சாப்பொருட்களின் உதவிக்கொண்டு பொருட்கள் உற்பத்திச் செய்யப்பட்டு உள்ளூரிலேயே விற்பனைச் செய்யப்படுகின்றது.

**சிறுதொழிலின் நன்மைகள்:** சிறு தொழில்களும் குடிசை தொ

ழில்களும் பின்வரும் முக்கிய இயல்புகளைக் கொண்டுள்ளது. குறைந்த முதலீடு செய்தால் போதும். 2. அதிக வேலைவாய்ப் அதாவது உழைப்பு செறிவு தொழில். 3. நேரடியான மேற்பார்வையு நிர்வாகமும். 4. சிறுதொழில்கள் தனியாள் மற்றும் கூட்டா நிறுவனமாக நடைபெறுகின்றது. 5. அரசாங்கத்திடமிருந் சலுகைகளும் உதவிகளும் கிடைக்கின்றன.

## இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்களின் முக்கியத்துவம்:

சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் இந்தி தொழிலமைப்பில் முக்கியப் பங்கு உண்டு. மொத்த தொழி உற்பத்தியில் சுமார் 49% சிறு தொழில்களால் உற்பத் செய்யப்படுகிறது.

இன்றைய இந்திய சூழ்நிலையில் சிறுதொழில்களின் முக்கியத்துவத்திற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1) வேலைவாய்ப்பு அளிக்கின்றது: இந்திய நாட்டில் இருக்கின் முக்கியப் பிரச்சினை வேலையின்மை ஆகும். முழுவேலை யின்மையும் போதா வேலையின்மையும் வளர்ந்து கொண்டே வருகின்றது. மக்கள்தொகை பெருக்கத்தால் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது படித்தோரிடையே வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் உதவுகின்றன.

எனவே சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளித்து வளர்ப்பதன் வாயிலாக நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்கலாம்.

2) குறைவான மூலதனம்: மிகக்குறைவான மூலதனத்தில் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் நடத்த முடியும் மூலதனம் பற்றாக்குறையுள்ள நம் நாட்டில் பேரளவுத் தொழில்களைவிட சிறுதொழில்களே ஏற்றதாக இருக்கின்றது.

3) திறமை குறைந்தவர்களுக்கு வாய்ப்பு: பேரளவுத் தொழிலுக்கு நல்ல தொழில் நுட்ப அறிவு படைத்தவர்களும் பயிற்சி பெற்ற வல்லுநர்களும் தேவைப்படுகின்றனர். நம் நாட்டில் இத்தகைய வல்லுநர்களை உடனடியாகப் பெற முடியாது. சிறுதொழில்களுக்கு வல்லுநர்கள் தேவையில்லை. பயிற்சிப் பெறாதவர்கள் கூட தொழிலில் ஈடுபட வாய்ப்பு உண்டு. எனவே சிறு தொழில்களின் லம் பயிற்சி பெறாத நபர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.



4) அந்நியச் செலாவணிக் குறைவு: சிறு தொழில்களை உள்நாட்டில் உற்பத்தியாகும் இயந்திரங்கள், தளவாடங்கள், தொழிற்கருவிகள் ஆகியவற்றை கொண்டே நடத்த முடியும். இயந்திரங்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதனால் அந்நியச் செலாவணித் தேவை எழுவதில்லை.

5) பரவல் முறை தொழில்: பேரளவுத் தொழில்கள் ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் தான் காணப்படுகின்றன. சிறுதொழில்களைப் பொறுத்த வரை பரவல்முறைத் தொழிலாக இருக்கின்றது. அதாவது சிறு தொழில்களை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக அமைத்திட முடியும். இதனால் தொழில்கள் நாடெங்கிலும் பரவி நாட்டின் எல்லா மக்களுக்கும் பலன் கிடைக்கும்.

6) சமசெல்வ வருமானப் பகிர்வு: நம் நாட்டில் செல்வமும் வருமானமும் ஏற்றத்தாழ்வான வகையில் பங்கீடு செய்யப் பட்டுள்ளது. செல்வத்தின் பெரும்பகுதி ஒரு சிலர் கையில் உள்ளது. இவற்றை மாற்றி வருவாய் செல்வ பகிர்வு சமமாக இருக்கும் படி செய்ய வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்கு சிறு தொழில்கள் ஏற்றவை ஆகும்.

7) துணைத்தொழில்கள்: சிறு தொழில்கள் பேரளவுத் தொழில்களுக்குத் துணைத் தொழில்களை உருவாக்கித் தருகின்றன. உதாரணமாக இரும்பு எஃகுத் தொழில் பேரளவில் நடைபெறுகின்றது. அதே சமயத்தில் ஆணிகள், இரும்புத்தகடுகள், சில உதிரிபாகங்கள் சிறு தொழில்கள் மூலம் தான் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே சிறு தொழில்கள் பேரளவு தொழிலுக்கு துணைத் தொழிலாக இருந்து துரிதத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

8) வேளாண்மைக்கு துணையானது: இந்திய மக்கள் வேளாண்மையையே அதிகம் சார்ந்துள்ளனர். வேளாண்மைத் துறை பருவ காலத்தை ஒட்டித்தான் வேலைவாய்ப்பு அளிக்கின்றது. எனவே வேலையில்லாத காலங்களில் சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்க முடிகின்றது.

9) உடனடி பலன்: பேரளவுத் தொழிலில் முதலீடு செய்யும் காலத்திற்கும் அம்முதலீட்டின் மூலம் கிடைக்கும் உற்பத்திக்கும் இடையே கால இடைவெளி அதிகமாக இருக்கின்றது. ஆனால் சிறு தொழில்களில் முதலீடு செய்த குறுகிய கால இடைவெளியிலேயே உற்பத்தி நிகழ்கின்றது. இதனால் உடனடி பலன் சிறுதொழில் மூலம் கிடைக்கின்றது. எனவே சிறுதொழில்களே ஏற்றதாக உள்ளது.

Scanned with CamScanner

**10) நாட்டு வருவாயை பெருக்குகிறது:** நமது நாட்டின் மொ[illegible] வருவாயில் சிறு தொழில்களின் பங்கு அதிகமாக இருக்கின்ற[illegible] அதிக மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதால் நாட்டு வருவா[illegible] பெருக்குவதில் சிறுதொழில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

**11) உழைப்பு செறிவு:** இந்தியாவில் அதிக மக்கள்தொகையா[illegible] உழைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது[illegible] உழைப்பாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உழைப்பு[illegible] செறிவுடைய சிறுதொழில்கள் உதவுகின்றன. இதனால் சிறு[illegible] தொழில்களே இந்தியாவிற்கு ஏற்றதாக உள்ளது.

இறுதியாக பேரளவுத் தொழில்கள் வளரும் பொழுது ஏற்படு[illegible] சமூக பிரச்சினைகள் சிறு தொழில்களை வளர்க்கும் பொழு[illegible] எழுவதில்லை. பேரளவுத் தொழில்கள் சுற்றுப்புற சூழ்நிலையை[illegible] கெடுக்கின்றது. புகை காற்றை அசுத்தப்படுகின்றது. கழிவுநீர்[illegible] குடிநீரை பாழ்படுத்துகின்றது. சுகாதார வசதிகள் குறைகின்றன. ஆனால் சிறுதொழில்கள் இந்த அளவிற்கு சுற்றுப்புற சூழ்நிலையை கெடுப்பதில்லை.

மேற்கூறிய காரணங்களால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு சிற்றளவு மற்றும் குடிசைத் தொழில்கள் முக்கியமானதாக கருதப்படுகின்றன.

**6. சிறுதொழில்களின் முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவரிக்க. (நவ 92)**

## சிறுதொழில்களின் பிரச்சினைகள்: (Problems of small scale industries)

சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் நமது நாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கு சிற்றளவு மற்றும் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன என்பதில் ஐயமில்லை. சிறு தொழில்களை வளர்க்க மத்திய அரசும் மாநில அரசுகளும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் இவை நன்கு வளர்ந்து வருகின்றது. ஆனால் இவற்றின் வளர்ச்சியில் பல பிரச்சினைகள் உள்ளன. அவைகளில் முக்கியமானவைகள்

1. **மூலப்பொருள் பற்றாக்குறை:** சிறுதொழிலுக்கு மூலப்பொருட்கள் கிடைப்பதில்லை. உதாரணமாக கைத்தறித்தொழில் அதற்கு வேண்டிய நூலுக்காக நூல் ஆலைகளை நம்பியுள்ளது. ஆனால் ஆண்டு முழுவதும் போதுமான நூலை அளிக்க முடிய



வில்லை. சிறு தொழில்கள் பேரளவுத் தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட்டு மூலப்பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. கிடைக்கின்ற மூலப்பொருள்களும் தரமானவையாக இருப்பதில்லை. அரசால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களும் சிறு தொழில்களுக்கு அளிக்கப்படும் மூலப் பொருள்களின் அளவு போதுமானதாக இல்லை என்பதை குறிப்பிட்டுள்ளது.

2. **நிதிப்பற்றாக்குறை:** சிறு தொழில்களுக்கான முக்கியப் பிரச்சினை நிதிப்பற்றாக்குறையாகும். தொழிலுக்கு தேவையான நிதியை எளிதாக குறைவான வட்டியில் பெற முடியவில்லை. இயந்திரங்களை வாங்குவதற்கும் தொழிலை நடத்துவதற்கும் தேவையான நிதி கிடைப்பது இல்லை. வணிக வங்கிகள் இத்தொழில்களுக்கு தாராளமாக கடன் கொடுக்க முன்வராததால் இவை லேவாதேவிக்காரர்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆனால் தற்போது இந்நிலைமை மாறி வருகிறது.

3. **விற்பனை சிக்கல்:** சிறு தொழில்களுக்கு அவற்றின் பொருட்களை அங்காடிகளில் விற்பதில் பிரச்சினை எழுகின்றது. சிறுதொழில் பொருள்கள் ஒரே தரமானவையல்ல. எனவே எந்த பொருளுக்கு விளம்பரம் அதிகம் உள்ளதோ அந்தப் பொருள் தான் அங்காடியில் விற்பனையாகின்றது. சிறுதொழில்களுக்கு ஏற்ற விற்பனை அமைப்புகள் இல்லை. மேலும் கிராமப் புறங்களில் போக்குவரத்து வசதி போதுமானதாக இல்லை. விலையைப் பற்றியோ பிற அங்காடி நிலவரங்கள் பற்றியோ அவர்கள் முன்கூட்டியே அறிய முடிய்வில்லை. இக்காரணங்களால் சிறுதொழில் பொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை.

4. **பின்தங்கிய தொழில் நுட்பம்:** சிறுதொழில் அமைப்புகள் உற்பத்தியில் பழைய முறைகளையும், பழைய கருவிகளையும், இயந்திரங்களையும் பயன்படுத்துகின்றன. கைவினைஞர்களுக்கு போதிய கல்வியறிவு இல்லாததால் புதிய நுட்பங்களை பின்பற்றுவதில்லை. இதனால் இவர்களின் ஆக்கத்திறன் குறைவாக இருக்கின்றது.

தொழிலாளர்கள் திறமையும் உற்பத்தித்திறனும் உயர்ந்தால்தான் சிறுதொழில்களின் உற்பத்திச் செலவு குறையும்.

5. **புதுப்பிக்கும் பிரச்சினை:** சிறுதொழில்கள் பழைய முறையில் வீடுகளில் பழைய இயந்திரங்களைக் கொண்டு நடைபெறுகின்றன. ஆனால் வளர்ச்சிப்பெற்ற நாடுகளில் சிறுதொழில்களில் அதிக மூல

Scanned with CamScanner

தனம் போடப்பட்டு அதிக ஆட்கள் நியமிக்கப்பட்டு பெரி தொழில்களை காட்டிலும் சிறப்பான முறையில் நடத்தப் படுகின்ற நமது நாட்டில் சிறுதொழில்களில் புத்தமைப்பையும் புதிய தொழி நுட்பத்தையும் கொண்டு வருவது ஒரு பெரும் பிரச்சினையா இருந்து வருகிறது.

6. கருவிக்ள் பிரச்சினைகள்: நம்நாட்டில் சிறுதொழில்கள் இன்னும் இறக்குமதி கருவிகளை தொடர்ந்து நம்பியிருக்கின்றன தேசிய சிறுதொழில் கழகம், சிறுதொழில்களுக்கு தவணைமுறையில் இயந்திரங்களையும் கருவிகளையும் அளித்து உதவுகின்றது இக்கழகம் இன்னும் சீரிய முறையில் செயல்பட்டால் ஏற்றுமதிக்கு உதவுகின்ற தொழில்களான காலணிகள் தயாரித்தல், பிளாஸ்டிக் தொழில்கள், மின்அணு தொழில்கள் ஆகியன நன்கு வளரும்.

7. பேரளவு தொழில்களுடன் போட்டி: சிறுதொழில்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற சில பொருள்கள் பேரளவுத் தொழில்கள் உற்பத்தியிலும் விற்பனையிலும் சிக்கனம் இருக்கிறது. ஆனால் சிறுதொழில்களுக்கு இச்சிக்கனம் கிடைப்பதில்லை. எனவே சிறுதொழில் பொருள்கள் பேரளவுத் தொழில் பொருள்களுடனும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடனும் போட்டியிட வேண்டியிருக்கின்றது. இது இத்தொழிலுக்கான முக்கியப் பிரச்சினையாகும்.

8. மின்சாரத் தட்டுப்பாடு: பல தொழில் அமைப்புகளுக்கு மின் இணைப்புகள் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற மின்சாரம் பற்றாக் குறையாகவும் அடிக்கடி தட்டுப்பாட்டிற்கும் உள்ளாகின்றது.

மேற்கூறிய யாவும் சிறு தொழில்களுக்கான பிரச்சினையாக இருந்து வருகின்றது. அரசு இதன் வளர்ச்சியில் அதிக ஆர்வம் கொண்டிருப்பதால் அவ்வப்போது இப்பிரச்சினைகள் ஓரளவு தீர்க்கப்பட்டு வருகின்றன.

**9. சிறுதொழில்களுக்கான அரசின் உதவிகள் யாவை ?**

## சிறு தொழிலுக்கான அரசின் உதவிகள்: (Govt Aid to small scale industries)

அரசு சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழிலுக்கான பிரச்சினைகளை உணர்ந்து இதன் வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி வருகின்றது. அரசால் உருவாக்கப்படுகின்ற தொழில் கொள்கைகள் சிறுதொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றன. சில



பண்டங்களின் உற்பத்தி சிறு தொழில்களுக்காகவே ஒதுக்கப் படுகின்றது. சிறுதொழில் வளர்ச்சிக்கான அரசின் நடவடிக்கைகள் பின்வருவன

1. **சிறுதொழிலுக்கான அமைப்பு:** மத்திய அரசு மத்திய சிறுதொழில் அமைப்பு ஒன்றை நிறுவியுள்ளது. இது சிறுதொழில் அமைப்புகளுக்கு தொழில் நுணுக்க மற்றும் அங்காடி சம்பந்தமான அறிவுரைகளைத் தருகின்றது. அரசு தேசிய சிறுதொழில் கழகத்தை அமைத்து கச்சாப்பொருட்களையும், இயந்திரங்களையும் அளித்து உதவுகின்றது. அரசாங்கம் அகில இந்திய அளவில் பல வாரியங்களை அமைத்துள்ளது. கதர் கிராமத் தொழில் வாரியம், குடிசைத் தொழில் வாரியம், கைத்தறி வாரியம், கைவினைஞர்கள் வாரியம் ஆகியவைகள் சிறுதொழில்களின் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு உதவி வருகின்றன.

2. **தொழில் நுணுக்க உதவி:** சிறுதொழில்களுக்கு தொழில் நுணுக்க உதவியளிக்க மத்திய சிறுதொழில் அமைப்பு ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. இவ்வமைப்பு எல்லா மாநிலங்களிலும் சிறுதொழில்களுக்கு சேவை செய்யும் நிலையங்களையும், விரிவாக்க நிலையங்களையும் அமைத்துள்ளது. இந்நிலையங்கள் தொழில் நுணுக்க பிரச்சினைகளை ஓரளவுக்கு தீர்த்து வைக்கின்றது.

3. **நிதி உதவி:** சிறுதொழில்களுக்கு மாநில அரசிடமிருந்து குறைந்த வட்டிக்கு கடன் வாங்க சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு மாநிலமும் மாநில நிதிக்கழகங்களை அமைத்துள்ளது. இத்துடன் பாரத ஸ்டேட் வங்கியும் வணிக வங்கிகளும் சிறுதொழிலுக்கு உதவுவதற்கு திட்டங்களை உருவாக்கியுள்ளது தற்போது சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் படித்தோர்களுக்கு சிற தொழில்கள் அமைக்க நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

4. **கச்சாப்பொருட்கள், இயந்திரங்கள் அமைத்தல்:** கச்சாட் பொருட்கள், எந்திரங்கள் ஆகியவைகளைப் பெறுவதில் சிறுதொழில்கள் சிறப்புச் சலுகைகள் பெறுகின்றன. தொழில் கூட்டுறவு அமைப்புகள் இவ்வகைகளில் உதவுகின்றன. தேசிய சிறுதொழில் கழகம் இயந்திரங்களை தவணை முறையில் அளித்து வருகின்றது. வர்த்தக கழகம் (STC) கச்சாப் பொருட்களை பங்கிட்டு அளித்து உதவுகின்றது. மின்சார இணைப்புகளில் சிறுதொழில்கள் முன்னுரிமைப் பெறுகின்றன.

5. **சந்தை உதவி:** சிறுதொழில் பொருட்களுக்கு போதுமான அங்காடி கிடைக்க பல நிறுவனங்கள் உதவி வருகின்றன. கதர் கிர

Scanned with CamScanner

மத் தொழில் வாரியம், கைத்தறி வாரியம் ஆகியவை சில்லை
விற்பனை நிலையங்களை ஒழுங்குபடுத்தி பொருட்களை விற்பனை
செய்து வருகின்றது. கைத்தறி மற்றும் சிறு தொழில்களுக்கான
கண்காட்சிகள் அமைக்கப்பட்டு அப்பொருட்கள் விற்பனை
செய்யப்படுகின்றன. விளம்பரப்படுத்தப்படுகின்றன.

6. தொழிற்பேட்டைகள்: சிறுதொழில்களுக்கு உதவுவதற்கா
தொழிற்பேட்டைகள் என்ற முக்கிய அமைப்புகள் உருவாக்க
பட்டுள்ளன. தொழிற்பேட்டைகள் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியி
பல சிறு தொழில் அமைப்புகளை உருவாக்குவதைக் குறிக்கின்றது
இதன் மூலம் அவ்வமைப்பில் உள்ள எல்லா நிறுவனங்களும் நல்
இடவசதி, மின்சாரம், தண்ணீர் மற்றும் போக்குவரத்து வசதிகள்
பெறுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களில் பல தொழிற்பேட்டைகள்
அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தியாவில் சுமார் 40
தொழிற்பேட்டைகள் செயல்பட்டு வருகின்றன.

7. தொழிலாளர்களுக்குப் பயிற்சி: அரசு தொழிலாள
களுக்கானப் பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கைகள்
எடுத்துள்ளன. சிறு தொழிலுக்கான பயிற்சி நிலையங்கள் இவ்
வகையான பயிற்சிகளை அளித்து வருகின்றன. அரசு அவ்வப்போது
குழுக்களை அமைத்து சிறுதொழில் வளர்ச்சியை கவனித்து
வருகின்றது

இவ்வாறு நாட்டில் சிறுதொழிலை வளர்க்க மத்திய அரசும்
மாநில அரசுகளும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு
வருகின்றன. சிறுதொழில்களுக்கு தனி சலுகைகள் அளித்து
ஊக்கமளித்து வருகின்றன.